## அப்பழுக்கில்லா அறுபது ஆண்டுகள்



வல்ல ரஹ்மான் அல்லாஹ்தஆலாவின் பேரருளாலும், பெரும் கருணையாலும், சமுதாய நலன்மிக்க சான்றோர்களாலும் 1960ம் ஆண்டு சிறிய குடிசையில் 10 மாணவர்களை கொண்டு மதுரை மாநகரில் துவக்கப்பட்ட நமது அல்-அமீன் எத்தீம் கானா இன்று விருட்ஷமாய், வீரியமாய் வளர்ந்து **150க்கும் மேற்பட்ட மாணவர்களோடு 63ம் ஆண்டில் தடம் பதித்து தொடர்கிறது.**

## எத்தீம் பிள்ளைகளின் தாய்வீடு



எட்டு வயதிற்கு மேற்பட்ட தாய், தந்தை இழந்த ஆதரவற்ற ஆண் பிள்ளைகள் சேர்க்கப்பட்டு-உயரிய உணவு, உடை, உகந்த சுகாதாரமிக்க தங்குமிடம், தரமான ஈருலக நற்கல்வி என முற்றிலும் இலவசமாக வழங்கி ஒரு தாயினும் மேலாய் பராமரித்து பாதுகாத்து வருகிறோம். இங்கு கற்றோர் பல்லாயிரம் பேர் இன்று உலகமெங்கும் மிகச்சிறந்த ஆலிம்களாக, உயர்ந்த பட்டதாரிகளாக, மேலாளர்களாக, பேராசிரியர்களாக, தொழில் முனைவோர்களாக, காவல் துறை அதிகாரிகளாக என பலவகைகளில் சமுதாயத்தில் மின்னும் நட்சத்திரமாக உள்ளார்கள்.

## உயரும் செலவினங்கள்

ஒவ்வொரு நாளும் அதிகரித்து வரும் செலவினங்களுக்கு ஒவ்வொருவரின் கல்வி, உணவு, உடை, மருத்துவச்செலவுகள் மற்றும் மின்சாரம், கட்டிடம், பராமரிப்பு, ஊழியர்கள் ஊதியம் என மாதம் ரூ.8 லட்சம் வரை செலவாகிறது. ஒரு மாணவருக்கு சராசரியாக ஒரு மாதத்திற்கு ரூ. 4000/- வரை செலவாகிறது.

## அன்பான வேண்டுகோள்

ஆகவே அன்பானவர்களே, இந்த அளப்பறிய பணி தொய்வில்லாமல் தொடர்ந்து நடைபெற, உங்கள் ஜக்காத், சதக்கா மற்றும் இதர பிற உதவிகளை அள்ளி வழங்குங்கள். இங்கு பயில்கின்ற மாணவர்களின் கல்விக்கும், உணவுக்கும் தாங்கள் வழங்கும் ஜக்காத் சதக்காகளே மூலதனம். ஆகவே தாங்களும் அள்ளி வழங்கி உங்கள் குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கு எங்களின் சேவையை எடுத்துரைத்து அவர்களையும் எத்தீம் பிள்ளைகளின் வளர்ச்சியில் பங்கெடுக்க செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## உயர்ந்த துஆ

ஒவ்வொரு நாளும், சுபஹ் மற்றும் மஃரிப் தொழுகைக்குப்பின், எத்தீம் பிள்ளைகளும், ஊழியர்களும் ஒன்றாக அமர்ந்து, உங்களுக்காக, உதவிடும் உயரிய உள்ளங்களுக்காக மனமுருகி துஆ செய்கிறார்கள். உங்கள் வியாபாரத்திற்கு, உங்கள் குடும்பத்திற்கு, உங்கள் குழந்தைகளின் கல்விக்கு, உங்கள் சகலமானவர்களின் தீனுடைய வாழ்க்கைக்கு துஆ செய்கிறார்கள். அவர்களின் மாற்றமில்லா உயர்ந்த துஆவை பெற்றுக்கொள்ள அன்புடன் அழைக்கிறோம். ஏற்றமிக்க எத்தீம் பிள்ளைகளின் துஆவை வல்ல ரஹ்மான் அல்லஹ்தஆலா கபூல் செய்வானாக (ஆமீன்)

## வங்கி கணக்கு விபரம்

UNION BANK OF INDIA,
SOUTH MASI STREET, MADURAI - 625 001.
CURRENT A/C NO: 435401010010013
IFSC CODE : UBIN0803499

**இன்ஷா அல்லாஹ், வங்கி கணக்கிற்கு நேரடியாக பணம் அனுப்பினால் தகவல் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.**



# அல்-அமீன் எத்தீம் கானா

**அல்-அமீன் நகர், K.புதூர், மதுரை - 625007.**
✆ 98420 21786, 97894 89494
alameenorphanage@gmail.com  www.alameenorphanage.com